மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசவேண்டியுள்ளது. தொடர்ந்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் உரை தரவேண்டியுள்ளது. ஆகவே, இருவரும் பேசி முடித்து, விவாதத்தை முடிப்பதற்கு கால அவகாசம் இருக்காது என்கிற காரணத்தால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய உரையும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய பதில் உரையும் நாளை இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(9-11-1994)* காலை *10.00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் *1-58* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

48. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் *1993-94* ஆம் ஆண்டிற்கான பதினொன்றாவது ஆண்டறிக்கை. *(1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956) 619*-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.

*17. பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று இருபத்திரெண்டாவது அறிக்கை, *1994-95.*

தமிழ்நாடு சட்டமன்ற நூலகம்
11 4 2000
சென்னை-600 009